**O.S.No.343/2009**

**Date:29.08.2018**

பிரதிவாதி தரப்பு சாட்சி 3 – சசிகலா, த-பெ.கந்தசாமி

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

(1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

3ம் பிரதிவாதி நிறுவனத்தில் மேலாளராக எப்போதிருந்து பணிபுரிகிறேன் என்றால் நவம்பர் 2017 முதல் பணிபுரிகிறேன். 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கும், வாதிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் பேச்சு வார்த்தை சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும் நேரடியாக தெரியாது, ஆவணங்களை பார்த்தால் தெரியும். தொழில் முனைவோருக்கு 1ம் பிரதிவாதி எங்கெங்கு இடம் ஒதுக்கீடு செய்வார்கள் என்றால் உறங்கான்பட்டியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. வேறு இடம் பற்றி தெரியாது. 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் சட்ட விபரங்கள், விதிமுறைகள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதிக்கு பிளாட் எண்.103 எந்த அடிப்படையில் எப்போது ஒதுக்கப்படடுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் 1ம் பிரதிவாதியின் சம்மதத்தோடு, அரசு அனுமதியோடு இந்த கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியும். வாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீடு உத்தரவினை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த நிபந்தனையில் சொல்லப்பட்டுள்ள விதிகள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். வாதி 2ம் பிரதிவாதியிடம் டேர்ம் லோன் பெறுவதற்கு சம்மத கடிதம் எப்போது கொடுத்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும், வாதி டேர்ம் லோன் பெறுவதற்கு 1ம் பிரதிவாதியிடமும் சம்மத கடிதம் கொடுத்தள்ளார், 3ம் பிரதிவாதி மூலமாக 2ம் பிரதிவாதியிடமும் சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அந்த சம்மத கடிதங்கள் நேரில் கொடுக்கப்பட்டதா, அல்லது தபாலில் கொடுக்கப்பட்டதா என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்ல முடியும். அந்த சம்மத கடிதம் கொடுத்த போது நான் 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் மேலாளராக இருந்தேனா என்றால் அப்போது இல்லை. வாதிக்கு கொடுத்த ஒதுக்கீடு உத்தரவு 2ம் பிரதிவாதியிடம்தான் கடன் பெற்று, 3ம் பிரதிவாதி மூலமாகத்தான் கட்டுமானங்கள் கட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனை ஒதுக்கீடு உத்தரவில் இல்லை என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும். இடத்தின் உரிமையாளருக்கு யாரிடம் கடன் பெற வேண்டும் என்பதும், யார் மூலமாக கட்டுமானம் செய்ய வேண்டும் என்பதும் உரிமையாளரின் உரிமை

என்றால் இல்லை, தொழில் முனைவோருக்கு மட்டுமே உரிமை உள்ளது. ஒதுக்கீடு உத்தரவில் 2ம் பிரதிவாதி கடன் பெற்று, 3ம் பிரதிவாதி கட்டுமானம் கட்ட வேண்டும் என்ற நிபந்தனை எதுவும் இல்லை என்றாலும், எனவே இட உரிமையாளரான வாதிக்கு கடன் கொடுப்பவரையும், கட்டுமானம் செய்பவரையும் தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. ஒதுக்கீடு உத்தரவு வழங்கப்பட்ட காலத்தில் கடன் கொடுப்பதாக கூறிய 2ம் பிரதிவாதி நிறுவனம் எவ்வளவு வட்டி விகிதத்தில் கடன் கொடுத்தார்கள் என்றால் கோப்புகளை பார்த்தால்தான் தெரியும். அந்த கால கட்டத்தில் நான் என்னவாக இருந்தேன் என்றால் உதவியாளராக மதுரை அலுவலகத்தில் பணிபுரிந்தேன். அந்த காலத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கொடுக்கப்படும் கடன் தொகைக்கான வட்டி எவ்வளவு என்றால் அந்த காலத்தில் எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. அந்த ஒதுக்கீடு உத்தரவு காலத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கொடுக்கப்படும் வட்டி விகிதம் குறைவாக இருந்தது என்றாலும், டிக்கில் வட்டி விகிதம் அதிகம் என்பதாலும்தான் வாதி டிக்கிடம் கடன் பெற சம்மதிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி 1ம் பிரதிவாதியிடம் கொடுத்த சம்மத கடிதத்தின் அசல் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. மற்றொரு சம்மத கடிதம் யாருக்கு கொடுத்தார் என்றால் எங்கள் நிறுவனத்தில் கொடுத்தார். அதன் தேதி வருடம் சொல்ல முடியுமா என்றால் கொடுத்துள்ளோம். எங்களிடம் கொடுக்கப்பட்டதாக கூறும் கடிதம்தான் பி.வா.சா.ஆ.8 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8ல் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த ஆவணத்தின் அசல் ஆவணம் என்ன ஆனது என்றால் அது தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டது. எப்போது அனுப்பப்பட்டது என்றால் கோப்புகளை பார்த்தால்தான் சொல்ல முடியும். உண்மை நகல் என்று கையொப்பம் செய்துள்ளது யார் என்றால் நான்தான். அசல் கடிதம் முன்பே அனுப்பப்பட்டு விட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணம் அசலோடு ஒப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் அசல் ஆவணம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பும் போதே எங்களுக்கு ஒரு நகல் எடுத்து வைத்திருந்தோம், அதை வைத்து ஒப்பீடு செய்து, சான்றிட்டு தாக்கல் செய்துள்ளோம். அனுப்புநர் பகுதியில் பேனா மையினால் எழுதப்பட்டுள்ளது யார் கையொப்பம் என்றால் அது வாதியால் எழுதப்பட்டிருக்கலாம். கீழேயும் கையொப்பம் எந்த மையினால் எழுதப்பட்டுள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. இடையில் வாசகங்கள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலே எழுதப்பட்டுள்ள கையொப்பத்திற்கும், இடையே பத்தி 2ல் பவுசியா எஸ்.கபீர் என்று எழுதப்பட்டுள்ளதற்கும் வேறுபாடுகள் உள்ளது என்றால் சரியல்ல, இரண்டும் ஒன்றுதான். 5.70 லட்சம் என்பதும் வேறு கையெழுத்தாக உள்ளது என்றால் இல்லை, அவர்களே

எழுதியதுதான். அனுப்புனர் இடத்தில் உள்ள கையெழுத்து, இடையில் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்து ஆகியவை வேறுபாடாக உள்ளது என்றால் இல்லை. எனவே என்னிடம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் இந்த கடிதம் வாதியால் அளிக்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் வாதி நேரடியாக கொடுத்தாரா என்றால் இல்லை, அப்போது நான் கிளை மேலாளராக இல்லை. எனவே பி.வா.சா.ஆ.8 ஆவணம் வழக்கிற்காக எங்களால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 கடிதம் யார், யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் வாதி, 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இது எப்போது என் கைவசம் எப்படி வந்தது என்றால் அவர்கள் வாதிக்காக கடன்பெறுவதற்காக எங்களுக்கு ஒரு நகல் அனுப்பியிருந்தார்கள். வாதி கொடுத்ததாக கூறப்படும் அசல் ஆவணத்தை எங்களிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை, புகைப்பட நகல்தான் கொடுக்கப்பட்டது. அசல் 2ம் பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த கடிதமும் எப்போது எந்த தேதியில் கொடுக்கப்பட்டது, நேரில் கொடுக்கப்படடதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எங்கள் கோப்பை பார்த்தால் சொல்ல முடியும். அந்த கோப்பை கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை, தேவைப்பட்டால் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். பி.வா.சா.ஆ.9ல் தேதி குறிப்பிடப்படவில்லை. இதிலும் அனுப்புனர் பகுதியில் உள்ள கையெழுத்து பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடையில் வாசகங்கள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணமும் அசல் ஆவணத்தை பார்த்து நான் சான்றொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே இந்த ஆவணமும் வாதியால் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் இல்லை என்றாலும், வாதி, 2ம் பிரதிவாதியிடம் கடன் பெறுவதற்கு 3ம் பிரதிவாதி கட்டுமானங்கள் செய்து கொடுப்பதற்கு சம்மத கடிதம் எப்போதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8, 9 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் ஒதுக்கீட்டு உத்தரவான பி.வா.சா.ஆ.1ல் 3வது நிபந்தனையாக 2ம் பிரதிவாதியிடமிருந்துதான் கடன் தொகை பெற்று, கட்டுமானங்கள் கட்டப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால் ஏற்கனவே சம்மத கடிதம் கொடுத்துள்ளதால் குறிப்பிடப்படவில்லை. எனவே சம்மத கடிதம் வாதி எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், ஒதுக்கீட்டு உத்தரவிலும் கடன் தொகை 2ம் பிரதிவாதியிடமிருந்து பெற வேண்டும் என்று நிபந்தனை எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 ஆவணம் புகைப்பட நகல்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களின் அசல்களும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு விட்டது. அந்த ஆவணங்கள் 2015ல்

ஏற்பட்ட வெள்ளத்தில் காணாமல் போய், தேடப்பட்டு வருகிறது. நான் எந்தெந்த ஆவணங்களை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பினோமத் என்ற விபரம் எங்களிடம் உள்ளது என்றால் சரிதான். தலைமை அலுவலகத்திலும் எந்தெந்த ஆவணங்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது என்ற விபரங்கள் இருக்கும் என்றால் சரிதான். அந்த அசல் ஆவணங்களை பார்த்தால்தான் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் உண்மைத் தன்மை தெரிய வரும் என்றால் சரியல்ல. கட்டுமானங்கள் சம்பந்தமாக நாங்கள், 2ம் பிரதிவாதி மற்றும் எல் அண்ட் டி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளோம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தப்படி நான் ஒரு கோ ஆர்டினேட்டர் என்றால் சரிதான். கட்டுமானங்கள் கட்டுவதற்கான தொகையை கொடுக்க வேண்டியது 2ம் பிரதிவாதி என்றால் ஒப்பந்தப்படி 3ம் பிரதிவாதியான எங்களுக்குத்தான் கொடுத்தார்கள். அதில் எதுவும் தவணை தவறிய நாள் அல்லது வேறு வகையில் ஏதாவது ஒப்பந்தப்படி 1ம் பிரதிவாதிதான் கொடுக்க வேண்டும் என்றால் தவணை தவறி எதுவும் கொடுக்கவில்லை. அந்த ஒப்பந்தத்தில் வாதி தரப்பினர் இல்லை என்றால் வாதிக்காக 1ம் பிரதிவாதி கையெழுத்துச் செய்துள்ளனர். அந்த ஒப்பந்தம் போடுவதற்கு முன்னால் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு சம்மத கடிதம் வாதி கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்த்தில் வாதிதரப்பினர் இல்லை என்பதால் வாதியை கட்டுப்படுத்தாது என்றாலும், ஒப்பந்தப்படி 1ம் பிரதிவாதிதான் நான் செலவு செய்த தொகையை செலுத்த கடமைப்பட்டவர் என்றாலும் எனவே வாதி எங்களுக்கு எந்த தொகையையும் செலுத்த கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். ஒதுக்கீடு செய்யப்பட்ட போதே பிளாட் எண்.103க்கு வாதி பெயரில் கிரையப் பத்திரம் ஏற்பட்டது என்றால் இல்லை. அடி மனைப் பத்திரம் மட்டும்தான் வாதி பெயரில் ஏற்பட்டுள்ளது. அந்தஅடி மனைப்பத்திரத்தை 2ம் பிரதிவாதியிடம் அடமானமாக வைத்து அடமானப்பத்திரம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆவணம் வைப்பீடு செய்துள்ளார். ஆவணங்களை எந்த அடிப்படையில் வைப்பீடு செய்துள்ளார் என்றால் டெர்ம் லோன் வாங்குவதற்காக வைப்பீடு செய்துள்ளார். ஏற்கனவே கொடுத்த சம்மத கடிதத்தின் அடிப்படையில்தான் வாதி அடிப்படை பத்திரம் டெபாசிட் செய்துள்ளார். அதற்கான தனி ஆவணம் எதுவும் எழுதி வாங்கப்படவில்லை என்றால் சரிதான். வாதி தன்னுடைய அடி மனைப் பத்திரத்தை 2ம் பிரதிவாதிக்கு அடமானமாகவோ, வேறு வகையிலும் ஈடோ, முறைப்படி டெபாசிட்டோ செய்யவில்லை என்றாலும், எனவே வாதியின் அசல் ஆவணமான அடிமனைப் பத்திரத்தை நானோ, 2ம்

பிரதிவாதியோ, சட்ட விரோதமாக கைப்பற்றி வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி செலுத்த வேண்டிய கடன் தொகைக்காக சிட்கோ அதனை செலுத்தி அடிமனைப்பத்திரம் வைக்கப்பட்டுள்ளது. எனவே வாதியின் அடி மனைப்பத்திரத்தை நாங்கள் வாதிக்கு திருப்பிக் கொடுக்க கடமைப்படடுள்ளோம் என்றால் சரியல்ல, வாதி கடனை திருப்பிச் செலுத்தும்போது பத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும். பணம் திருப்பிக் கொடுக்கப்படாதது தொடர்பாக தனிப்பட்ட நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் அவர் ஊரில் இல்லை என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. என் எதிர்வழக்குரை கோரியுள்ள தொகையினை வாதியிடமிருந்து வசூல் செய்ய முடியாது என்றால் சரியல்ல, அது அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய பணம் ஆகும்.